# First Meeting of the National Coordination Committees of India and Uzbekistan on implementation of joint projects

August 24, 2020

## கூட்டு திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பான இந்திய மற்றும் உஸ்பெகிஸ்தானின் தேசிய ஒருங்கிணைப்புக் குழுக்களின் முதல் கூட்டம்

ஆகஸ்ட் 24,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் அதிபர் திரு. ஷௌகத் மிர்ஸியோயோவ் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஒருங்கிணைப்புக் குழுக்களின் இந்திய உஸ்பெகிஸ்தானுக்கிடையே ஒருவருக்கொருவர் ஒப்புக்கொண்ட திட்டங்களின் செயல்பாட்டை கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்ட முதல் கூட்டம் 24 ஆகஸ்ட் 2020 அன்று வெளியுறவுத்துறை மாநில அமைச்சர் ஸ்ரீ.வி.முரளீதரனின் இணை-தலைமையிலும் மற்றும் உஸ்பெகிஸ்தான் துணை பிரதம மந்திரி மற்றும் முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு வணிகம் மந்திரி திரு. சர்தோவ் உமர்சகோ பங்கேற்க நடைபெற்றது.

இருதரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பின் தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை இருதரப்பினரும் விரிவாக ஆய்வு செய்தனர், இதில் இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம், முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளின் விவசாய விளைபொருட்களுக்கான பரஸ்பர சந்தை அணுகல், இந்தியாவின் கடன் கோடுகளின் கீழ் அடையாளம் காணப்பட்ட திட்டங்களை செயல்படுத்துதல் அகியவற்றிற்கான பேச்சுவார்த்தைகளின் நிலை ஆகியவை அடங்கும். குஜராத் மாநிலத்திற்கும் உஸ்பெகிஸ்தானின் ஆண்டிஜான் பிராந்தியத்துக்கும், தாஷ்கண்டில் உள்ள இந்தியா-உஸ்பெகிஸ்தான் தொழில்முனைவோர் மேம்பாட்டு மையத்திற்கும் இடையே கடன்,ஒத்துழைப்பு.

இணைதலைவர்கள் பல்வேறு திட்டங்களில் அடைந்த முன்னேற்றம் குறித்து திருப்தி தெரிவித்ததோடு , திட்டங்களை விரைவாக முடிப்பது இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் பலப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தனர். பரஸ்பர வசதிக்காக இந்தியாவிற்கு வருகை தருமாறு துணைப் பிரதமர் திரு. உமர்சகோவுக்கு அழைப்பு விடுத்தார்.

**நியூ டெல்லி**
**ஆகஸ்ட் 24, 2020**

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.